
www.tamilarangam.net

# KATPAHAM

# கற்பகம்




அட்டைப்படக் கவிதை பக் – 12

NR. 7

01.02.96

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**KATPAHAM**
**கற்பகம்**
**ISSN 0909-9697**

**Readaktion:**
Troels Johansen
**(Ansv.)**
**Readaktion:**
M.Shan
**Readaktionhjælp**
N.Mahendran
David George
T.Kugan
M.S.Kandasamy
T.Selvakumar

பத்திரிகைப் பொறுப்பாளர்:
ற்றோல்ஸ் ஜோகான்சன்
பதிப்பக பொறுப்பாளர்:
எம். சண்
உதவியாளர்கள்:
என் மகேந்திரன்
ரி.குகன்
எம்.எஸ். கந்தசாமி
டேவிட் ஜோர்ஜ்
து.செல்வக்குமார்

# Inhold
## உள்ளடக்கம்

Rimelig eller....

பொதுமக்களின்......
பொதுக்கூட்டம்

Udlædning poli..
Ganthee
என்ன குற்றம்
வ. சிங்களக் குடியேற்..
உணர்வு
அருவுருவம்
லிங்கநகர்...
தமிழரும் மதப்...
அகஸ்தியர்
நண்பனுக்கு
தமிழ்....
வேலை .....
சிறுவர் பகுதி...
இந்து .....
இந்து சமயத்தின் ...

நிதி...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Rimelige eller urimelige krav til det offentlige system.

"Tag et spejl - kig på dig selv. Er dit krav rimeligt? Har du selv gjort alt, hvad du kan, før du henvender dig til kommunen?"

Sådan må jeg regelmæssigt spørge borgere - danskere såvel som udlændinge - som kommer til træffetid på mit kontor på Rådhuset for at drøfte problemer.

Det er mit synspunkt, at kommunen / amtet / staten skal hjælpe de mennesker, som ikke er i stand til at klare sig selv. Det er netop kendetegnet på et velfærdssamfund som det danske, at ingen må fortabes eller lide nød, fordi de på grund af handicaps, sygdom, manglende evner, ulykke osv. ikke kan klare tilværelsen alene.

Men det er også min mening, at den offentlige velfærd på nogle områder er gået for langt. Og jeg mener helt klart, at der er borgere, som unødvendigt og uærligt udnytter mulighederne. Dermed ødelægger de systemet og skaber vrede blandt de borgere, som skal betale.
Lad mig give et par eksempler.

Det er ikke ualmindeligt, at nogle prøver på at få offentlige ydelser f.eks. bistandshjælp, pensioner, boligtilskud, medicinpenge, m.m., selv om de ikke er berettiget til det. Der bliver givet urigtige oplysninger til sagsbehandleren. Det kan medføre, at der gives ydelser, som aldrig skulle gives. Kun ved tilfældigheder eller fordi naboer eller andre bliver vrede over det og fortæller det til kommunen, kan kommunen ændre på det og fratage de uretmæssige ydelser.

Men derved ødelægges i virkeligheden mulighederne for at hjælpe de mennesker, som har et stort og reelt behov for hjælp. - Som nævnt gælder dette både for danskere og ikke-danskere; der er ofte ingen forskel.

Som udlænding i Danmark er det vigtigt, at man lærer at tale dansk - sproget virker som en nøgle, der kan låse op for nogle muligheder. Derfor er det en god ide, at børn kommer sammen med danske



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



børnf.eks. idaginstitutioner. Men jeg oplever, at forældre tager deres børn ud af daginstitutioner, hvis de selv skal betale for det. Det er ofte urimeligt, for mange danskere er ikke bedre økonomisk stillet end ikke-danskere. Jeg skal opfordre til, at man tænker på børnenes fremtid, og er klar til at ofre noget for at give dem en nemmere skolegang og dermed bedre livsmuligheder.

Lad mig også minde ikke-danskere om et problem vedr. familiesammenføring. For at få en mor og far til Danmark har en del skrevet under på, at man er i stand til og også villig til at forsørge dem. Efter at forældrene så er kommet til Danmark, oplever jeg alligevel, at man kommer til mit kontor og fortæller, at man ikke kan påtage sig udgiften. Man ønsker, at det offentlige skal skaffe bedre bolig og overtage den økonomiske opgave ved at have forældrene boende i Danmark. Også til sådanne ønsker må jeg sige nej. Det er nemlig forkert i det ene øjeblik at sige ja og skrive under på, at man kan klare opgaven, og derefter løbe fra sit løfte. Den går ikke.

Jeg tror, det er vigtigt, at vi allesammen udøver en høj grad af selvjustits. Velfærdssystemet skal som nævnt hjælpe de mennesker, som har et reelt behov, men hvis man ser sig i spejlet og ikke 100% ærligt kan sige, at man har gjort alt, hvad man overhovedet kan for at klare sig selv, så skal man gøre det, før man henvender sig til kommunen.

Der er lavet en stor undersøgelse i Danmark af de 16 til 24 årige danskeres adfærd. Uheldigvis viser den, at en del af de unge danskere mener, at det er kommunen snarere end dem selv, der skal løse deres problemer. De tænker galt. Kommunen kan klare et her-og-nu problem, men hvis man skal udvikle en kompetance til at klare sine egne problwemer, må man bruge sig selv - man må selv igang.

Derfor er jeg glad for, at jeg også oplever flere og flere såkaldte "selvhjælpsgrupper". Dvs. grupper af mennesker, som går sammen og hjælper både sig selv og andre. Det kan være mennesker, som har lidt af en alvorlig sygdom, og som kan hjælpe hinanden ved at tale sammen omdet. Det kan være ensomme mennesker, som laver samtale- eller madgrupper, eller måske mennesker som har mistet et barn eller en



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ægtefælle. Det, der er fint ved selvhjælpsgrupper, er, at man hjælper både sig selv og andre - meget bedre end kommunen kan, for det er ikke altid penge, der løser problemer.

Hvis vi skal bevare et retfærdigt og solidarisk samfund, er det nødvendigt, at vi allesammen opfører os korrekt og hver især gør, hvad vi kan, før vi lægger vore problemer over på andre.
Derfor "kig dig selv i spejlet!"

***Troels Johansen***

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## பொதுமக்களின் பணத்திலிருந்து தனிநபர்கள் இலாபம் கருத நினைப்பது நியாயமானதா, நியாயமற்றதா ?

"உன்னையே நீ அறிவாய்" (உங்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்)

"உள்ளூராட்சி சபையிடமிருந்து உதவிகோரமுன்பு நீங்கள் உதவி கேட்பது நியாயமானதா, நியாயமற்றதா என்று சிந்திப்பதில்லையா ?"

இவ் உள்ளூராட்சி பிரதேசத்தில் குடியிருப்பவர்கள், தங்களுக்கு உள்ள சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக என்னை காரியாலயத்தில் சந்திப்பது வழக்கம். அப்படியான நேரங்களில், அவர்களுடைய கோரிக்கைகள் நியாய மானவையா என்ற விவாதம் எழுவதும் உண்டு. உள்ளூராட்சி சபைகள், மாவட்டசபைகள், அரசாங்கம் என்பன தங்களைத் தாங்களே சொந்தமாக பராமரித்துக் கொள்ள முடியாத மக்களுக்கு உதவ வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். இதுவே டெனிஸ் நலன் புரிச்சமுதாயத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இக் கொள்கையின்படி மக்கள் வாழ்க்கையில் அவசியமான அடிப்படைத் தேவைகளை இழக்கக்கூடாது. அதாவது ஊனமுற்றவர்கள் என்றமுறையில் அல்லது சுகயீனம் காரணமாக அல்லது ஆற்றல் இழந்தவர்கள் என்ற முறையில் அல்லது வேறுவகையில் உதவி இன்றி துன்பப்படக்கூடாது.

பொதுநலன்புரி உதவிகள் கூடிக்கொண்டு போகின்றது என்பது எனது சொந்தக் கருத்தாகும். நல்ல நோக்குடனான வசதிகளை மக்கள் தகுந்த காரணம் இல்லாமல் தங்கள் மனச்சாட்சிக்கு எதிராக, துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பது எனது தெளிவான கருத்தாகும். இப்படியான செயற்பாடுகள் சமுதாயத்தினை அழிக்கின்றது மட்டுமல்லாமல், வருமானவரிகட்டும் மக்களையும் ஆத்திரமடைய வைக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான் இங்கு சில உதாரணங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சமூக உதவி, ஓய்வுஊதியம், வசிப்பிடஉதவிமான்யம், மருத்துவ உதவி போன்ற பொது நல உதவிகளைப் பெறுவதற்கு, ஒருவர் உரிமையற்றவராயினும் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது சாதாரண விடயமாகும். சிலர் சமூக சேவைக் காரியாலயத்தில் தவறான தகவல்களைக் கொடுத்து உதவி பெற்றுக் கொள்ளுகிறார்கள். இப்படியான செயற்பாடுகள் பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரும். அயலவர்கள் அல்லது வேறு சிலர் இதனை அறிந்து ஆத்திரம் அடைந்து, உள்ளூராட்சிசபையிக்கு தெரியப் படுத்துவதனால் உள்ளூராட்சி சபையானது, சட்டவிதிகளுக்கு முரண்பாடான முறையில் வழங்கப்பட்ட, பண உதவி என்பதனால் அதனை திருப்பிச் செலுத்தும்படி பணிக்கும். இப்படியான செயல்பாடுகளினால் உண்மையாக உதவி தேவைப்படுபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இது டெனிஸ்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் பொருந்தும்.

வெளிநாட்டவர்கள், டெனிஸ் மொழியைக் கற்றுக்கொள்வது மிக முக்கியம். மொழியைக்கற்றுக்கொள்வதனால் பல வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு வெளிநாட்டவர்களின் பிள்ளைகள் செல்வதனால், டெனிஸ் பிள்ளைகளுடன் சேர்ந்து பழகவும், டெனிஸ் மொழியைக்கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைக்கின்றது. பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்திற்கு பணம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் சிலர் பிள்ளைகளை, பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்களில் சேர்ப்பதில்லை என்பதை நான் அனுபவரீதியாகக்கண்டுள்ளேன். எல்லா டெனிஸ்காரர்களும் பொருளாதார வசதியுடையவர்கள் அல்ல. நான் கேட்பது என்ன வெனில் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி பெற்றோர்கள் சிந்திக்க வேண்டும், அவர்களுக்கு சிறந்த கல்வியை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால் மட்டுமே, அவர்களால் சிறந்தவாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

குடும்ப ஒருங்கிணைப்பானது ஒரு பிரச்சனை என நானோ, டெனிஸ்மக்களோ கருதவில்லை. பெற்றோர்கள் குடும்ப ஒருங்கிணைப்பின் மூலம் டென்மார்க்கில் வாழவேண்டுமாயின், விண்ணப்பதாரர் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும். அதாவது முழுப்பொறுப்பையும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்வதாக ஆனால் பெற்றோர் இங்கு வந்தபின்பு, தங்கள் குடும்பச் செலவுகளைச் சமாளிக்கமுடியாமல் இருக்கின்றது என்று என்னிடம் பலர் கூறியுள்ளார்கள். அவர்கள் வீட்டுவசதி, பொருளாதாரவசதி என்பன செய்து கொடுக்கப்படவேண்டும் என்று என்னிடம் கேட்கிறார்கள். இப்படியான விடயங்களுக்கு உதவி செய்ய முடியாது என்று நான் கூறுவது வழக்கம். ஏன் எனில், பெற்றோர்கள் இங்கு வரமுன்பு கூறிய கூற்றுக்கு மாறாக, செயல்படுவது மிகவும் பிழையான செயலாகும்.

நான் மிகமுக்கியமாக விரும்புவது என்னவெனில் எல்லோரும் மனச்சாட்சியின் படி நடக்க வேண்டும் என்பதாகும். கட்டாய தேவை ஏற்படும் போது நலன்புரி அமைப்பானது மக்களுக்கு உதவி செய்யவேண்டும். உங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த ஆவன செய்தீர்களா? என்னென்ன முயற்சிகள் எடுத்தீர்கள் என்று பலமுறை சிந்தித்த பின்பே உதவிக்கு வருவது சிறந்த முறையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



16-24 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களின் ஒழுக்க நடைமுறைபற்றி விரிவான ஆராய்ச்சி ஒன்று பெரியளவில நடத்தப்பட்டது. இதில் ஒரு பகுதி இளைஞர்கள் தாங்கள் தங்கள் பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு உள்ளூராட்சி சபையின் பொறியில் அகப்பட்டு விட்டதாக கூறுகிறாகள். இந்த எண்ணம் பிழையானது. உள்ளூராட்சி சபை ஒரு சில பிரச்சினைகளைத் தீர்க்க உதவி செய்யலாம். ஒருவர் தன்னம் பிக்கையை வளர்த்து, தனது பிரச்சினைகளைத் தானே தீர்த்துக் கொள்ள வேண்டும். ஒருவர் தன்னை, தனக்கு உபயோகிக்கவும் வழி நடத்தவும் பழகிக்கொள்ள வேண்டும்.

"சுய உதவிக்குழுக்கள்", இயங்கிவருவதாலும், அவர்களின் செயற்பாடுகளினாலும் நான் சந்தோஷம் அடைகிறேன். நான் பல வழிகளில் இக்குழுக்களின் சிறந்த பெறுபெறுகளைப் பெற்றுள்ளேன். இக்குழுக்கள் தங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஒருவருக்கொருவர் உதவி செய்து வருகிறார்கள். இக்குழுக்கள் சுகயீனமான வர்களுக்கு பல வழிகளில் உதவி செய்கிறார்கள். அதாவது ஒருவர் தனிமையால் பாதிக்கப்பட்டால் சந்தித்து உரையாடுகிறார்கள், அல்லது ஒருவர் பிள்ளையை இழந்தால், அல்லது குடும்பத்தில் ஒருவரை இழந்ததால் பாதிக்கப்பட்ட வராகவிருக்கலாம். இந்தக் குழுக்களின் செயல்பாடானது, உள்ளூராட்சி சபையினால் செய்யக்கூடிய சேவையைவிடச் சிறந்ததாகும். ஏன் எனில் எல்லாப் பிரச்சினை களையும் பணத்தினால் தீர்த்துக் கொள்ள முடியாது.

நியாயமான, ஒற்றுமையான, கட்டுப்பாடான சமுதாயத்தை பாதுகாக்கவேண்டியது எல்லோருடைய கடமையாகும். எல்லோரும் சிறந்த முறைகளில் ஒழுக வேண்டும். உண்மையாக சரியான தகவல்களைக் கூறவேண்டும். மற்றவர்களிடம் உதவிக்கு செல்ல முன்பு, தங்கள், தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆதலால் "உங்களைப்பற்றி நீங்களே ஆழமாகச் சிந்தியுங்கள்".

***Troels Johansen***

## Kaninen og Skildpadden

Engang var der en kanin, der spurgte en skildpadde, om de skulle løbe om kap. Skildpadden sagde ja. Kaninen løb først, men ville så lige sove, skildpadden kom forbi den. Da kaninen vågnede, så den efter skildpadden, men kun ikke se den, . så den, troede, at skildpadden var bag ved den. Den løb så op til målet, og der stod skildpadden og ventede.

Geeta



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Herning, d. 17. 02. 1996.

Der indkaldes herved til **ORDINÆR GENERALFORSAMLING** i Tamilsk Dansk Venskabsforening, **SØNDAG D. 24. MARTS KL. 14.30** i SID's lokaler, Vestergade 27, Herning.
Der er kun adgang for medlemmer, som opfylder betingelserene for at deltage i generalforsamlingen.

**DAGSORDEN**

1. Valg af dirigent.
2. Bestyrelsens beretning, v/ formanden.
3. Fremlæggelse af revideret regnskab, v/ kassereren.
4. a) Drøftelse vedrørende beretning og regnskab.
   b)Fastsættelse af kontingent for 1996.
5. **Valg**
   a) Der er valg til 5 bestyrelsesposter.
   b) Der skal vælges 2 tamilske og 2 danske suppleanter, henholdsvis første og andensuppleanter.

**PAUSE**

6. a) Aktivitetsplan for 1996.
   b)Medarbejdergruppe til Festevelse.
7. Indkomne forslag. Forslag fra medlemmerne skal være formanden i hænde senest 8 dage før generalforsamlingen.
8. Eventuelt.

Venlig hilsen
på bestyrelsen vegne
M. S. Kandasamy
formand



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேர்ணிங், 17. 02. 1996.

# தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்: - SID மண்டபம், Vestergade 27, Herning.
காலம்: - 24. 03. 1996. ஞாயிற்றுக்கிழமை 14.30 மணி.

யாப்பின் விதிகளுக்கமைய அங்கத்தவர்கள் மட்டும் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படுவார்கள்

## நிகழ்ச்சி நிரல்

1. கூட்டத்திற்கான தற்காலிகத் தலைவர் தெரிவு.
2. நிர்வாகசபையின் அறிக்கை தலைவரால் சமர்ப்பிக்கப்படும்.
3. வரவு - செலவு அறிக்கை பொருளாளரால் சமர்ப்பிக்கப்படும்.
4. அ)நிர்வாக சபையின் அறிக்கை, வரவு - செலவு அறிக்கை, விவாதம்,
   ஆ) 96ம் ஆண்டிற்கான சந்தாப்பணம்.
5. தெரிவு.
   அ) 5 நிர்வாகசபை உறுப்பினர்.
   ஆ) 2 முதலாவது பதில் நிர்வாகசபை உறுப்பினர்களும் ( இதில் ஒருவர் டெனிஸ், மற்றவர் தமிழர் ), இரண்டாவது பதில் நிர்வாகசபை உறுப்பினர்களும் ( இதில் ஒருவர் டெனிஸ், மற்றவர் தமிழர்) தெரிவு.

## இடை வேளை

6. அ) 1996ம் ஆண்டிற்கான திட்டங்கள்.
   ஆ)கலாச்சார விழாவிற்கான உதவியாளர்கள்.
7. அங்கத்தவர்களிடம் ஏதாவது பிரேரணைகள் இருப்பின் பொதுக் கூட்டத்திற்கு 8 நாட்களுக்கு முன்பு தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கவும்.
8. வேறு விடயங்கள்.

நன்றி.

நிர்வாக சபை சார்பாக

எஸ். கந்தசாமி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# DANSK UDLÆNDINGEPOLITIK FRA 1983-LOVEN TIL I DAG: *UDVIKLING ELLER TILBAGESKRIDT?*

– AF EBBA STRANGE

(fortsætte fra sidste bladet)

## Ninn Hansen

Mens den kørte i folketing, retsudvalg og hos ombudsmanden, var der ingen, der ønskede at røre undlændingeloven. Desuden var De Radikale gået i regering med V og K i foråret 88, og de tre partier kunne i hvert tilfælde ikke enes om forslag på dette område.

5. I juni 1991 tilsluttede Danmark sig EF´s asylkonvention. Det fik ikke nogen praktisk betydning for dansk udlændingeloven, da Danmark jo allerede i 1986 var gået i spidsen for EF-landene med hensyn til stramninger. Den er i øvrigt ikke trådt i kraft endnu, da flere lande endnu ikke har tilsluttet sig den.

### Stramninger og et frieri

6. Fra december 1990 var De Konservative og Venstre alene i regering, så i foråret 1992 kom de med deres store forslag til stramninger, først og fremmest i indvandrernes rettigheder på familiesammenføringsområdet. Og det frieri til Socialdemokratiet, som Ninn Hansen kom så gruelig galt afsted med i 1987, det lykkedes for Hans Engell i 1992. De indgik et forlig, der indebar, at Socialdemokratiet tilsluttede sig en del af de stramninger, ministeren havde foreslået, mod at regeringspartierne tilsluttede sig en del af de forslag vedrørende integration af indvandrere, som socialdemokraterne havde fremlagt i et forslag til folketingsbeslutning.

Strmningerne har haft store konsekvenser for vore indvandrere først og fremmest, men såmænd også for danskfødte danskere, der er så lykkelige at forelske sig i en udlænding. De indebærer,

A. at kravet om, at man skal kunne forsørge en person, der ønskes familiesammenført, nu ikke kun gælder gamle forældre, men også ægtefæller og mindreårige børn. Forsørgelsesevnen skal dokumenteres og godkendes af både kommunes socialforvaltning og Direktoratet for Udlædninge, og beløbet er sat så højt, at der har fast arbejde. Og det tager slet ikke hensyn til, at den familiesammenførte eventuelt selv er i stand til at bidrage til familiens forsørgelse.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



B. Man skal have haft fast bopæl i Danmark i mindst fem år for at kunne få en udenlandsk ægtefælle hertil.
C. Toårs grænsen for udvisning, hvis opholdsgrundlaget ikke mere er til stede er forlænget til en treårsgrænse, en katastrofe for mange udenlændske kvinder, der havner i et uuholdeligt ægteskab.
E. Det er en betingelse for familiesammenføring med ægtefælle, at begge er over 18 år.
F. På flygtningeområdet skulle der ske en bestemt til trængt opstramning af den tid, der bruges på asylsagsbehandling. Det man kunne enes om var, at genoptagelse af en sag ikke altid havde opsættende virkning.
G. Endelig blev der skabt øget mulighed for fængsling af udlændinge.

Kun SF og De Radikale stemte i mod.

**Flyttedag og nye stramninger**

7. I 1993 fik vi en socialdemokratisk ledet regering med deltagelse af De Radikale. Udlændingeområdet blev flyttet over i indenrigsministeriet, og minister blev den tidligere ordfører på indvandrerspørgsmål. Hun lagde ud med at inddrage kommunerne i arbejdet med at finde asylcentre. Desuden fremsatte hun et repatrieringsforslag, der økonomisk er så ringe, at stort set ingen har brugt det, og som iøvrigt også omfatter indvandrere, der jo ikke som flygtninge kan have et virkeligt repartrieringsbehov. Derfor er loven simpelthen med til at ødelægge de muligheder, der kunne ligge i en ordentlig repartrieringslov, som kunne give flygtninge, der ønsker at vende hjem, den økonomiske håndsrækning, de mangler for at turde vore springet.
8. I juni kom så opfølgningen af de stramninger i asylbehandlingssagerne, som var blevet bebudet i 1992, men som skulle afvente en lonforberedende udvalgsbehandling i det såkaldte "Per Sørensen udvalg". De indeholdt en indskrænkning i de tilfælde, hvor en anmodning om genoptagelse, en klage til ombudsmandnen eller en ansøgning om humanitær opholdstilladelse har opsættene virkning på udrejsefristen.
Kun principielle sager skal nu behandles i 7-mandsnævn, alle andre i tremandsnævn.
10-dags frist for ansøgning om humanitær opholdstilladelse efter afslag på asylansøgning.
Obligatorisk inddrivelsesordning overfor familiemedlemmer, der har påtaget sig at forsørge en familiesammenført, men som alligevel må have bistandhjælp.
Udgifte samlevende får samme forsørgelseskrav som ægtefæller.

**Holdningsskabende lov**

Således har udviklingen været i den danske udlændingslov, stort set stramning på stramning, og i takt hermed har danskernes holdning til udlændinge udviklet sig i mere og mere negativ retning. Så mindretallet i det gamle udlændningeudvalg havde ret: Den holdning,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



der ligger til grund for loven vil bestemme befolkningens holdning til det stigende antal udlændninge, der kommer til at bo i virt land. Hvis vi hande kunnet holde den åbne, liberale, humanistiske holdning, der trods alt var bærende i 1983-loven, og hvis der havde siddet ministre og borgmestre, der bakkede op bag den holdning, så havde chancerne for en åben, interesseret holdning hos den danske befolkning været større. Heldigvis findes den da stadig hos mange danskere.

**Særlove**

Jeg skylder nok lige at nævne to ting, for at gøre billedet fuldkomment, nemlig palæstinenser-loven og jugoslaverloven. To gange har folketinget måtte lovgive for en ganske bestemt afgrænset gruppe af asylsøgere. Første gang var i marts 1992, da asylmyndighederne var holdt op med at give alle statsløse palæstinesere, der søgte om det, asyl, og der derfor opstod desperation blandt asylansøgerne af usikkerhed koblet sammen med den lange ventetid. Da greb et folketingsflertal mod regeringens ønske ind og sikrede denne gruppe opholdstilladelse.
Anden gang var i efteråret 1992, da krigen i det tidligere Jugoslavien havde raset et årstid og nu var nået til Bosnien. En del borgere fra det tidligere Jugoslavien var frit rejst ind i Danmark, der ikke havde visumkrav overfor Jugoslavien. Efterhånden som de følte sig truet, søgte de asyl. Danmark indførte det våben, der altid er lige ved hånden, når man vil holde folk ude. Man indfører visumpligt, så kan forfulgte mennesker jo se, hvordan de vil overvinde den forhindring. Det gjaldt de republikker, der i dag hedder restjugoslavien. Men nu kom bosnierne, og de danske myndigheder besluttede så, i stedet for at indføre visumpligt også for dem, at følge UNHCR's bøn og i det mindste give dem midlertidig opholdstilladelse et halvt ad gang i to år, så regnede man med, krigen var slut. Alligevel indførte man vissumpligt overfor bosnierne fra juni 1993, og åbende i stedet et par konotrer i Kroatien, hvor flygtninge kunne komme og søge visum, hvis de gerne ville have asyl i Danmark.
Endelig i år er man begyndt at behandle asylansøgningerne fra dem med den midlertidige opholdstilladelse, så de efterhånden kan blive sluset ud til en mere anstændig flygtninge-tilværelse. Men kapitlet om bosnierne er ikke mere flatterende for dansk udlændinge-politik, end de andre kapitler, jeg her har prøvet at ridse op. Til gengæld kunne de være emne for et helt nyt foredrag.

EBBA STRANGE HOLDT OVENSTÅENDE FOREDRAG PÅ LDF'S ÅRSMØDE, 25-2-95.

இதன் தமிழாக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Indiens fader Ganthee adikal

Vi forstiller os at Ganthee Adikal er "Indiens fader". På grund af sin dygtighed fik Indien selvstendighed af England. Kusarath amt blev han født 1869 oktober. Hans far hed Kramsanth Ganthee og hans mor hed Puttalibai og han blev døbt Måhanathas.



Da han var lille havde han læst en bog som hed siravanans historie. Det handlede om Hvordan man skulle respektere ens forældre. Han så også en drama der handlede om Sandhed og aldrig løgn. På denne måde holdt han fast ved at hans forældre var større end den tro han havde og heller aldrig at sige en løgn.

Da han var færdig med sin uddannlse i Indien tog han til London for at læse videre som advokat. Han gav tre løfter til sin mor. Den første: Han måtte ikke spise kød. Den anden: Han måtte ikke drikke alkohol. Den tredje: Han måtte ikke gøre dumme ting. Han gjorde alt havd han kunne for at holde de løfter. Ovre i England boede han hos en Englænder og han sagde at England er et koldt land derfor er det svært at leve her uden at spise kød eller drikke alkohol. Og til dette sagde han hvis situationen er sådan at jeg skal gøre de ting min mor forbyder mig vender jeg tilbage til Indien.

Selvom han skulle igennem mange problemer udførte ham, sin uddannelse som advokat og vendte hjem.

Og med den samme selvilje hjælp han Indien med at få selvstændighed.

Os som er langt fra vores hjemmeland og er nu i fremmede europiske lande skal holde Ganthees gode gernninger.

***Diinna Ram***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## என்னகுற்றம் செய்ததங்கு கேட்குதங்கே அலறல்ஒலி

படருதற்கு கொம்பின்றி
பரிதவித்த முல்லைக்கு
பாரிவள்ளல் தேர்ஈந்தான்
அவனும் எம் தமிழ் இனமே.

வாய்மை ஒன்றைக் காப்பாற்ற
நாடிழந்து நகரிழந்து
மனையிழந்து மகனிழந்தான்
வாய்மையாளன் சந்திரனும்

வாரி வழங்கி நின்றான்
வள்ளல் என்னும் கர்ணபிரான்
ஆவிபிரிகையிலும் – தன்
தர்மத்தை உதிரத்தால்.

பசுக்கன்றின் பிரிதுயரால்
நீதிகேட்ட தாய்ப்பசுவை
தன்ஆவி கொடுத்தன்றோ
மனுநீதி பெயர் போனான்.

நம் நாட்டை நம்மொழியை
சுதந்திரத்தைக் கேட்டதற்கு
கொடுத்ததுயர் போதுமம்மா
சிங்களவர் வெறிக்கூட்டம்.

நாடிழந்து நகரிழந்து
மொழியிழந்து பெயர்ந்திட்ட
நம்மவரில் பெரும்பகுதி
கண்டதென்ன வாழ்வினிலே ?

நம் இனத்தின் அலறல் ஒலி
ஒலிக்குதிங்கே காதினிலே
அவர்கள் படும் துன்பமங்கே
தெரியுதம்மா மனக்கண்ணில்.

உடுப்பதற்கு உடையின்றி
உயிரைக்கையில் பிடித்தபடி
ஓடுதம்மா எம்கூட்டம்
துரத்துதம்மா வெறிக்கூட்டம்.

மழைவந்தால் ஒதுங்குவதற்கும்
இடமின்றி அழுகுதங்கே
மரத்தின் கீழ் தானிருந்து– மழையாய்
வடிக்குதங்கே கண்ணீரை.

அடுத்தவேளை உணவுக்கு
அடுப்பெரிக்க இயலாமல்
அலறுதம்மா தாய்க்குலங்கள்
யாரிடம்போய் முறையிடுவோம்.

மனைவி செத்துக் கிடந்தாலும்
எடுத்தடக்கம் செய்யாது
விரட்டுகிறான் குழியினுள்ளே
வெறிகொண்ட
இராணுவத்தான்

பாதை தெரியாது விடிவுகிடைக்காது
ஓடுதம்மா தமிழர்குலம்,
உதிரஆறுதான் கடந்து
ஆறுமங்கே வற்றவில்லை
அலறல்ஒலி ஓயவில்லை.

இருப்பிடத்தைக் கேட்டழுமா
இறந்தோர்க்காய்
நினைத்தழுமா
ஒருசாண் வயிறென்னும்
பசித்துயரால் பதறிடுமா

என்பதை நினைக்கையிலே
எரியுதம்மா என்னுள்ளம்
செய்தகுற்றம் தான் என்ன ?
தாய்நாடு கேட்டதுவா ?

*தயா இராம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கில் சிங்களக் குடியேற்றம்

## தமிழ் மக்களுக்குப் பரிசு

நீர்த்தேக்க, நீர்ப்பாசன முறையின் கீழ் வறண்ட வலயத்தைச் சேர்ந்த இடங்களில் விவசாயக் குடியேற்ற ங்களை உருவாக்கும் வேலை 1930களில் ஆட்சியிலிருந்த சகல அரசாங்கங்களது சிறு உற்பத்தி அபிவிருத்திக் கொள்கையின் பிரதான அம்சமாக காணப்பட்டது. நீர்ப்பாசன கட்டுமானங்கள், நிலங்களை வளப் படுத்தி குடியிருத்துவதற்காக விவசாய குடும்பங்களைச் சேர்ந்தெடுத்தல், பொது வசதிகளை ஏற்படுத்தல் என்பன அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. 1981ம் ஆண்டளவில் பத்து லட்ச த்திற்கும் அதிகமான ஏக்கர் பரப்பில் 488, 000 விவசாயக் குடும்பத்தினர் குடியிருத்தப்பட்டனர். அதன் பிறகு மகாவலித் திட்டத்திற்காக கையேற்க ப்பட்ட நிலங்களில் இன்னும் அரசின் ஏற்பாட்டின் கீழ் குடியேற்றமயமாக்குதல், என்பது குறிப்பாக விவசாய – உற்பத்தி நாடொன்றை அபிவிருத்தி செய்தல், மற்றும் அதனைப் பேணல் எனும் பெயரில் செயற்படுத்தப்பட்டன.

விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை கஸ்டப்பட்ட ஏழை விவசாய மக்களு க்கும், தொழில் வாய்ப்பு தேடியலையும் ஏனைய மக்கள் பிரிவுக்கு பிரித்து வழங்கும் எனும் ஆளும் பிரபுத்துவ அரசியலின் தேவை, இச் செயல் பாடுகளுக்கு வாய்ப்பளித்தது.

சர்வஜன வாக்கெடுப்பு வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கருத்து இச் செயல்பாடுகளுக்கு ஊக்கமளித்தது.
தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் வரை குடியேற்றங்களை வியாபித்த போது குடியேற்றவாசிகளாக தேர்ந் தெடுக்கப்பட்டவர்களில் பெரும் பாலானோர் சிங்கள மக்களாகவே காணப்பட்டதானது இன முரண்பாடுகள் வளரக் காரணமாணது.

1. இதற்கான செலவுகள் அனைத்தையும் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்குவது என்றும், பெறப்படும் பிரயோசனம் நாட்டின் சகல மக்களுக்கும் பகிர்ந் தளிக்கப்படும் என்றும் தீர்மானிக் கப்பட்டது.

2. பயன்படுத்தக்கூடிய இடங்கள் அனைத்திலும் தமிழ் விவசாயிகள் போதுமானளவினர் இல்லை என்பது போன்ற காரணங்களால் மேற்குறிப்பிட்ட அரசின் நடவடிக்கைகள் நியாயப் படுத்தப்பட்டது.

நாட்டின் இனங்களுக்கிடையில் இருக்கின்ற ஐக்கியம் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதன் மூலம் பாதிப்புக் குள்ளாகும் என பல அரசியல் தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. மொழி, கலாச்சார பண்பாட்டு ரீதியில் தங்களுக்கென்று இருக்கும் தனித்துவத்தைக் கொண்ட இனம் ஒன்றை இந் நடவடிக்கையின் மூலம் பாதிப்புக்குள்ளாக்கி, தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசங்களில் குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் வேற்றின மக்களைப் பரப்புதலின் மூலம் இனவிகிதாரம் மாற்றமடையும். 1956இல் தமிழரசுக்கட்சி மாநாட்டின் முக்கியமான தீர்மானமாக இது மேற்கொள்ளப்பட்டது.

"பாரம்பரியமாக தமிழ் மொழி பேசிவருகின்ற பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிறுத்துங்கள்" என அம்மாநாட்டில் கோரப்பட்டது. அதிலிருந்து குடியேற்ற நடவடிக்கைகள் என்பது இனப்பிரச் சனையில் முக்கிய அங்கமாக பேசப்பட்டது. 1957 ஜூலை மாதம் பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தத்தின் போது கீழ் வரும் காரணங்கள் முக்கியம் பெற்றன.

"மாவட்ட சபைகளின் அதிகாரங்களுக் குட்பட்ட பிரதேசத்தினுள் அமையும் குடியேற்றத் திட்டங்களின் காணிகளை ஒதுக்க வேண்டிய தகுதி யானவர்களை தெரிவு செய்யும் அதிகாரம், மேற்படி குடியேற்றத் திட்டங்களில் பணியாற் றுவதற்குரிய அலுவலர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் என்பன குடியேற்றத் திட்டங்கள் தொடர்பாக மாவட்ட சபைகளுக்கு இருக்க வேண்டிய அதிகாரங்கள் ஆகும். இது தொடர்பாக தற்போது கல்லோயா அபிவிருத்தி சபையால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்".

பண்டாரநாயக்க–செல்வநாயகம் உடன் படிக்கை செல்லுபடியற்ற நிலைமை உருவானதன் பின் விவசாயக் குடி யேற்றங்களை ஸ்தாபிக்கும் நடவடிக் கைகள் தொடரப்பட்டு பிரச்சனை மேலும் மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது.

இப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டி யதன் முக்கியத்துவம் இரு தரப்பின் அரசியல் தலைமையினாலும் விளங்கிக் கொள்ளப்பட்டது என 1965 மார்ச்சில் டட்லி–செல்வநாயகம் உடன்படிக் கையின் போது உணர முடிந்தது. அதில், "வடக்கு–கிழக்கு மாகாணங் களில் காணிகளைப் பகிர்ந்து கொடுக்கும் போது பின்வரும் முன்னுரிமைத்திட்டத்தை அமுல் படுத்தவும் சேனநாயக்க உடன்பட்டார்.

அ. வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளில் அம் மாவட் டங்களில் வாழும் நிலமற்றவருக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

ஆ. இரண்டாவதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும்.

இ. மூன்றாவதாக இலங்கையின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் தமிழ் குடி மக்களுக்கு முதலிடம் கொடுத்து, ஏனைய குடிமக்களுக்கும் காணிகள் வழங்கப்படும்".

தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் மக்கள் குழுமத்தின் பண்பாட்டில் மாற்றம் ஏற்படுவதை தடுப்பதையே மேற்படி குறிப்புகளின் நோக்கமாகும். சிங்கள விவசாயக் குடியேற்றங்கள் தொடர்ச்சியாக இப் பிரதேசங்களில் மேற்கொள்ளப் பட்டதுடன், சிங்கள அரசியல் தலைவர்கள் தெரிந்தும் வேண்டு மென்று அரசியல் அதிகாரத்துவ ரீதியில் இவற்றைப் பின்பற்றினர்.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் சிங்கள விவசாயிகள் 2, 50,000 பேரைக் குடியேற்றும் தற்போதைய யோசனையை இதனாலேயே கவனத்தில் கொள்ள வேண்டி யிருக்கின்றது. இது ஏற்கனவே இருக்கும் கொள்கையைத் தொடர் ந்தும் பின்பற்றி நிலைமையை மோசமடையச் செய்வதும் அல்லாமல் இப்பிரதேசங்களில் மக்கட் குழுமத்தை கலந்து விடுவதன் மூலம் மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தேர்தல் மையத் தொகுதியை பலவீனப் படுத்துவதன் மூலமும், அதற்கூடாக தமிழ் மக்களின் அரசியல் பலத்தை பலவீனப்படுத்தியும் அவர்களின் சுய தனித்துவத்திற்கான பிரதேச மையத் துக்கும் எதிரான திட்டமிட்ட நட வடிக்கையாகும்.

இந்தக் குடியேற்றவாசிகளுக்கு ஆயுதப் பயிற்சியும் அவர்களை ஆயுத பாணிகளாக்கும் திட்டமும் தனிநாடு கோரிப்போராடி ஆயுதப் போராளி களுக்கெதிராக யுத்தம் புரிவதற்காக பாதுகாப்புப் படையினருக்கு, உதவிப் படையாக குடியேற்றவாசிகளை பயன் படுத்தும் நோக்கமும் உள்ளதாகத் தெரிகிறது. "எல்லை" பற்றி அண்மையில் வெளியிட்டவற்றை நோக்கும் போது இவ் யோசனையை மேலும் அதிகப்படுத்தும் சாத்தியங்களும் தெரிகிறது. தமிழ் மக்கள் இந்த யோசனையை இவ்வாறே நோக்கு கின்றனர்.

இனப்பிரச்சினை தொடர்பாக அரசு இப்போது மேற்கொண்டுவரும் தீர்வுகளில் அதாவது, ஆயுத பலத்தினால் தமிழ் மக்கள் மற்றும் தனிநாட்டுக்காகப் போராடி வருபவர்களை அடக்குவது மற்றும் படிப்படியாக இனக்கலப்புக்களுக்கூடாக பிரதேசங்களில் பிரதேச அதிகார அலகு ஒன்றை ஏற்படுத்துதல் அவற்றில் ஒரு பிரதான அம்சமாக சிங்களக் குடியிருப் பாளர்களை தமிழ்ப் பிரதேசங்களில் குடியிருத்தும் யோசனையாகக் கொள்ளலாம். வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் பௌத்த வணக்க ஸ்தலங்களான அரசின் பொறுப்பு க்குள்ளும் மற்றும் பாதுகாப்பின் கீழ் கொண்டுவருவதற்காகவும் அண்மையில் கூறப்பட்ட யோசனைகள் இந்த தந்திரோபாயங்களின் அங்கமாகக் கொள்ளலாம். இவை அனைத்தும் இனங்களின் இருப்பிற்கு எதிரான செயற்பாடுகள் ஆகும்.

தமிழ் மக்களிடம் அதிகாரம் சரியான அளவு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும அரசியல் தீர்வுக்காக, குரல் கொடுக்கப்படவேண்டும் யுத்தரீதியிலான தீர்வுக்கான எங்கள் எதிர்ப்பே எங்களால் வெளியிடப்பட்ட இப்பிரசுரம் தமிழ் மக்கள் பெரும்பாண்மையாக வாழும் பிரதேசங்களில் அரசின் அங்கீகாரம் மற்றும் ஆதரவுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக் குதல் பற்றிய யோசனை களுக்கு எங்கள் பூரண எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம். இது இரு மக்கள் தரப்பினருக்குமிடையே இருக்கின்ற பிரச்சனைகளை மோசமடையவும், ஆழமடையவுமே செய்யும் என்பது எங்கள் நம்பிக்கை. இதில் இருமக்கள் தரப்பும் ஐக்கியமாக வாழும் காலத்தை பின்தள்ளிக் கொண்டே இருக்கும்.

இந்த யோசனைகளை விட்டுவிட்டு தமிழ் மக்களின் பிரதேச, மொழி, கலாச்சார தனித்துவத்தை அங்கீகரித்து ஆசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதற்காக அவர்களின் பரிதிநிதிகளுடன் செயற்படுமாறு நாங்கள் கேட்டுக்கொள்ளகிறோம்.

(இத்துண்டுப் பிரசுரம் 1985இல் மோர்ஜ் நிறுவனத்தினால் வெளியடப்பட்டது. 10 வருடங்களின் பின்னும் காலப் பொருத்தம் கருதி இதனை வெளியிடுகிறோம்)

நன்றி

– சரிநிகர் டிசம்பர் 14.95 – ஜன 10.96


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உணர்வு

உடைந்து போன உள்ளங்கள்...!
உருக்குலைந்து போன உருவங்கள்....!
கடந்து போன உறவுகள்..!
கரைந்து போன கனவுகள்..!

ஏக்கம் நிறைந்து போன இரவுகள்..!
தூக்கம் மறந்து போன விழிகள்.. !
பசியை மறந்து போன வயிறுகள்..!
உருசியை மறந்து போன நாக்கள்..!

நிச்சயம் அற்றுப் போன பயணங்கள்...!
நின்மதி இழந்து போன வாழ்க்கை..!
ஒளிகள் இழந்து போன இல்லங்கள்..!
இத்தனையும் எம் தாய்மண்ணில்..!

தாய் மண்ணின் உயர்வுக்காக உரிமைக்காக போராடும்..!
தமிழனின் தன்மான உணர்வு மட்டும்..
எண்ணையிட் தீயாக எழுந்து நின்று எரிகிறது.. ஆனால்
இங்கே என்ன நடக்கிறது...?
நெஞ்சத்தை கொஞ்சம் தொட்டு..
எண்ணித்தான் பாருங்களேன்..
எண்ணித்தான் பாருங்களேன்..

*வேலணையூர் பொன்னண்ணா*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## ☞ அறிவித்தல் ☜

வயலின், வாய்ப்பாடு (சங்கீதம்), Music theory (சங்கீத நடைமுறை சாராக் கோட்பாடு) வகுப்புகள் Herning நகரில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**வாய்ப்பாடு:** திரு. திலகேஸ்வரன் அவர்கள். (தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி சென்னை)

**வயலின்:** திருமதி. காயத்திரி சண்முகம். (தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி சென்னை)

குழந்தைகளை ஈடுபடுத்த விரும்புவோர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும்

**தொடர்புகட்கு:** திரு. திலகேஸ்வரன். ☎ 98 433579.
திருமதி. காயத்திரி சண்முகம். ☎ 97 402964



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அருவுருவம்

.............................நெடுங்கதை

..................................................முல்லையூரான்..............................

ராம் தனது கட்டுப்பாடற்ற வாழ்க்கையினால் புலம்பெயர்ந்த நாட்டிலும் அங்கு வாழும் தமிழர்சமூகத்திலும் நல்லஅபிப்பிராயத்தை தெடிக்கொள்ளாதுவிட்டாலும் அவன் தான் வாழும் சமூகத்தில் மிகுந்த வெறுப்பினைச் சம்பாதித்துவிட்டான். முன்னர் எல்லாம் பணம் கற்றைகற்றையாக சுழன்றுகொண்டிருந்தபோது அவனைச்சுற்றிவந்த தமிழ்நண்பர்களும் அவனது இன்றைய பரிதாபநிலையில் கலந்துகொள்ளாது விலகிவிட்டனர்.

வருமானத்திற்கு எட்டாத செலவுகளை எல்லாம் தனது ஆடம்பர வாழ்வுக்காக அள்ளிஇறைத்து இன்று வெறும் கையோடு இருப்பதைவிடவும் மிகுந்த கடனாளியாகவும் ஆக்கப்பட்டுவிட்டான் ராம்.

கடன்கொடுத்த நண்பர்கள் அவனிடமிருந்த பொருட்களை எடுத்துச்சென்றுவிட்டனர். வட்டிக்குக் கடன்கொடுத்தோர் எல்லாம் தேடித்திரிந்தனர். நாட்டைவிட்டே மாறிவிடுவதே நல்லது என்று அடிக்கடி மனதில் எழும் நினைவுகளை எல்லாம் போட்டுக்குளப்பியபடி தனிமையில் வருந்தினான் ராம்.

கலா என்ன பெண்ணைக் கல்லாயாணம் செய்துவிட்டு அவளை யேர்மனியிலேயே தவிக்கவிட்டுவிட்ட குற்றஉணர்வுவேறு ராமை அலக்களித்தது.
"பெண்பாவம் பொல்லாதது " என்று பெரியவர்கள் சொல்வனவெல்லாம் இப்போதெல்லாம் அடிக்கடி பூதாகாரமாக வந்து கல்லெறிந்தது.

அதைவிடவும் கலாவின் சகோதரன் நிர்மலன் டென்மார்க்கிலேயே அதுவும் அவனது நகரத்திலேயே வசித்துவருவது நெஞ்சுக்குள் எதையோ வைத்து இறுக்கியதுபோன்ற உணர்வு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தாய்நாட்டைவிட்டு பிரிந்ததிலிருந்தே தனது தாய் தகப்பனுடன் எதுவித தொடர்புகளுமற்றவனாக ராம் வாழ்ந்துவந்தான். இன்றைய நிலையில் தாயின் முகம் அடிக்கடி வரவும் ராமின் கண்கள் பனித்து வழிந்தன

தான்செய்த அடாவடித்தனங்களை நினைத்து மனம்கலங்கினான். எத்தனை ஆண்டுகளாக பெற்றோருடன் கடிதத்தொடர்புதன்னும் இல்லாத அருவுருவமான வாழ்வில் தன்னைக் கரைத்துக்கொண்டதனால் இன்று அவனது உருவமே அர்த்தமற்றதொன்றாகிப்போனதை தனது நிலைக்கண்ணாடியிலிருந்து பார்த்து அழுதான்.

அவனது பல்விளக்கும் அந்த பச்சை பிரஸ் தேய்ந்துபோய் கருவாடுபோல வளைவுகண்டிருந்தது. அப்போதெல்லாம் விதவிதமான வாசனைப்புட்டிகளால் நிறைந்திருக்கும் அவனது குளியலறை அலமாரி வெறித்துக்கிடந்தது. அவனது உடுப்புகள் துவைக்கப்படாமலே ஊத்தையில் தடித்து குளியலறைமூலையில் குவிந்துகிடந்தன. அந்த அழகான குளியலறை ஒரு மரணத்தைச்சுமக்கும் பிரேதஅறைபோல அவனுக்கு இருந்தது.

தனது புள்ளிவிழுந்தும் சிகரட் காவியினால் மஞ்சள்காவி படர்ந்தும் அப்பிக்கிடந்த அந்த நிலைக்கண்ணாடியில் ராம் தனது உருவத்தைப் பார்த்தான்.

அவனது அந்தக்கால சுருள்சுருளான கேசம் பன்றியின் மயிர்போல நீண்டு நிமிர்ந்து உயர்ந்து நின்றது.

தனது கண்களைப் பார்த்தான். கறுத்து பழுத்து ஒருநோயாளியின் விழிகள்போல அவை கிடந்தன.

அவனது கடந்த காலக்குற்றங்கள் மாறிமாறி அம்பாகவந்து குத்தின.
டென்மார்க்கில் அவனுக்குக்கிடைக்கும் அரசஉதவியில் பெரும்பகுதியை மதுஅருந்துவதற்கு செலவிட்டான்ராம்.
முன்னரெல்லாம் அளவாகஇருந்த சிகரட்பழக்கம் இன்று ஒருபோதைப்பொருள்போல எப்போதும் அவனது உதட்டில் கிடந்தது.
நீட்டிக்கொண்டுகிடக்கும் தோள் எலும்புகளை தனது மெல்லிய பலவீனமான விரல்களால் தடவிப்பார்த்தான் ராம்.
குடித்துமுடித்த சிகரட்துண்டை ஜன்னலோரமாக எறிந்துவிட்டு படுக்கை அறைக்குள் தள்ளாடித்தள்ளாடி வந்தான்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கட்டிலிலே அந்த இளம்பெண் தூக்கத்தில் இருப்பதுபோல இருந்தது.
ராம் தனது கண்களை இறுக்கிமூடி திறந்து பார்த்தான்.
அது அவளைப்போலவே இருந்தது
நினைவுகள அடித்துத்துரத்திக்கொண்டு வந்தன.

சிலஆண்டுகளுக்கு முன்புதான் அவளை யேர்மன் எல்லையில் சந்தித்திருந்தான். அவள் தான் திருமணம்செய்துகொண்ட தனது கணவன் இருக்கும் இன்னொரு நாட்டுக்கு எல்லைகடக்க ஆயத்மாக நின்றிருந்தாள்.

ராமே கதியென அவள் பக்குவமாக அவனோடு வந்து எப்படியும் தனது கணவனிடம் சென்றடைந்துவிடவேண்டும் என்ற ஆவலில் ராம் சொன்னதற்கெல்லாம் தலைஅசைத்தாள். அவளது தங்கநகைகள் எல்லாவற்றையும் ராமிடம் தந்தாள்.கொண்டுவந்திருந்த வழிச்செலவுப்பணத்தினையும் ராம் நடுக்காட்டில் வைத்துப் பிடுங்கிக்கொண்டான்.

குளிரைத்தடுக்கும் அவளது ஆடைக்குள் ராமின் விருப்பம் நின்றபோதுதான் அவள் கொந்தளித்தாள்.

வீதிகளில் ஒளிரும் பொளிஸ் நீலவிளக்குகளைக் காட்டி ராம் பயமுறுத்தினான்.

அசையாது மிரண்ட அந்த இளம்பெண் ஏதிலியானாள்.

இப்போதும் அந்த இளம்பெண்ணின் உருவமும், அவளது கதறல்களும் ராமின் காதுகளில் இடியாய் விழுந்தன.
படுக்கை அறைக்கதவை அடித்து அவனே நிலத்தில் விழுந்தான்.
வீடெங்கும் அவனது அவல ஒலி எழுந்து அதிர்ந்தது.
ஜன்னலோரமாக்கிடந்த அந்த விஸ்க்கிப்போத்தலை கையில் எடுத்துக்கொண்டான்.
வாயில் சிகரம் எரிந்துகொண்டிருந்தது.
சட்டைப்பையுள் லைட்டர் இருக்கிறதா என சரிபார்த்துக்கொண்டான்.
வீதிவிளக்குகள் எரிந்துகொண்டிருந்தன.
ராம் இப்போது சந்தோசமாக நடந்துகொண்டிருந்தான்.
ஆனால் ஒரே ஒரு சந்தேகம் மட்டுமே இருந்தது. இந்த இரவில் பெற்றோல் வாங்கலாமா என்பதுதான் அது. தனது லைற்றரை கைக்குள் இறுக்கிக்கொண்டு நடந்தான் ராம் முற்றும்
(அடுத்த இதழிலிருந்து...முல்லையூரானின் ...கவிதைத் தொடர்கதை ஒன்று ஆரம்பமாகிறது)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தண்ணியிலே போறார்!!!

மாட்டு வண்டி போகும் சத்தம்
கேட்டுக் காலை எழுந்து நித்தம்
வீட்டுப் படலை தனை தம்பர் வேக மாகத் திறக்கிறார்
வாட்டும் தாகம் போகக் கள்ளை மண்டத் தானே பறக்கிறார்

தண்ணி யிலே போற தம்பர்
கண்ணில் பட்டால் வானில் பொம்பர்
கண்ணி வெடியை கொண்டு வாடா வானில் விதைக்க என்கிறார்
சண்டை யிடும் பெடியலை கண்டால் சத்த மின்றி போகிறார்.

குமராய் வீட்டில் இருக்க இரண்டு
இவரோ றோட்டில் கிடந்து பிரண்டு
தவறு தவறாய் வார்த்தை சேர்த்து தத்து வங்கள் பேசுகிறார்
இவரின் நிலமை கண்டு சிறுவர் கல்லை எடுத்து வீசுகிறார்.

கட்டும் வேட்டி முழுதும் அழுக்கு
எட்டோ பத்தோ கள்ளில் முழுக்கு
கெட்டு அழிந்து போகும் வழியில் காலம் பூரா நடக்கிறார்
வட்டி வளரும் கடனை அடைக்க வகையோ அற்று
கிடக்கிறார்.

*– பரம் –*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**லிங்கநகர்: தமிழ் மக்கள் வெளியேறும்படி இராணுவம் பணிப்பு!**

திருகோணமலை லிங்நகரை அண்டிய பகுதிகளில் குடியேறிய தமிழ் மக்களை வெளியேறும்படி இராணுவம் வற்புறுத்தி வருகிறது. வன்செயல்களால் பாதிக்கப்பட்டு உடமைகளை இழந்த மக்களின் மீள் குடியேற்றமாக அமைந்த இப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 200 குடும்பங்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றன. ஒலிபெருக்கி மூலம் அம்மக்களை வெளியேறுமாறு அறிவித்தல் செய்த இராணு வத்தினர் 2 நாட்கள் கழித்து இரவு நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மக்களை பயமுறுத்தியுள்ளனர். இந்த நிலம் இராணுவத்துக்குச் சொந்தமானது என்பது அவர்களது விவாதம். ஆனால் காணித் திணைக்கள அதிகாரிகளோ இது இராணுவத்திற்கு வழங்கப்படவில்லை என்கிறார்கள். குடியேறிய மக்களை பொறுத்மட்டில் அவர்கள் குழம்பிப் போய் இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் ஒரு சில வீடுகளுக்கு சென்ற புத்தபிக்கு ஒருவர் அந்தப் பகுதி தங்களுக்குச் சொந்த மானது என்றும் தமிழர்கள் வெளியேறிவிட வேண்டும் என்றும் பயமுறுத்தியுள்ளனர். புத்தபிக்குடன் குண்டர்கள் சிலரும் துணையாக வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள். –விவேகி– ( **நன்றி சரிநிகர் ஜன.11– ஜன.24, 1996)**

www.tamilarangam.net



# தமிழரும் மதப்போரும் (3)

*கவிவேழம் பாரதிபாலன்*

தமிழர் இயற்கையுடன் இணைந்தவர்கள்.
கட்டுமீறிய போக போக்கியங்களில் திளைத்தவர்கள்.
காடு சார்ந்த முல்லை நிலத்திற்கு ஒரு கடவுளும்; மலை சார்ந்த குறிஞ்சி நிலத்திற்கு ஒரு கடவுளும்; வயல் சார்ந்த மருத நிலத்திற்கு ஒரு கடவுளும்; கடல் சார்ந்த நெய்தல் நிலத்திற்கு ஒரு கடவுளும் என தனித் தனிக் கடவுளரை வழிபட்டனர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." (தொல்காப்பியம்)

இவர்தம் வழிபாடும், வாழ்வமைப்பும் புதிய நாகரிக நிலைக்குத் தள்ளப்பட்டது.
புரட்சிச் சிந்தனை எழுந்தது.
சமண, புத்த மதங்கள் வழி அறக் கோட்பாட்டு உணர்வு எய்தினர்.
இருந்தும் சமண, புத்த மதங்களின் துறவறக் கோட்பாடுகளைத் தொடர்ந்து பின்பற்றுவது போக போக்கியம் மலிந்த தமிழர்தம் இன்ப வாழ்க்கைக்கு இடையூறாக இருந்திருக்க வேண்டும்.

இத்தகைய இடைவெளிகளை ஆரியர் தமக்கு சாதகமாகப் பயன் படுத்தியமை காலங் காலமாக நடைபெற்று வந்திருக்கிறது.
வடமொழி வேதத்தில் உருத்திரன் எனப்படும் எமது சிவன் அவருக்கு முன்னணியில் நின்ற இந்திரன், வருணன், பிரம்மா முதலிய கடவுள் பட்டியலைக் கடந்தே முன்னணிக்கு வந்திருந்திருக்கிறார். பின்னர் இந்துக்களின் முழுமுதற் கடவுளாக நிலை பெற்றும் இருக்கிறார்.

இதே வேளை, சமண, புத்தர்கள் தமது தொண்டு உணர்வால் மக்களை அணுகி அவர்களை சீர்திருத்தப் பாதைக்கு இட்டுச் சென்று கொண்டு இருந்திருக்கிறார்கள். ஆரியரால், மேலும் மக்களிடையே வேர்விட்ட பழிக்குப் பழி என்ற உணர்வுகளை இந்தத் துறவிகள் நீக்கி பாவம், பழி போன்ற நன்னெறிகளை புகட்டலாயினர்.

இதனால் காலங்காலமாக இந்து மதத்தை செப்பனிட வேண்டிய தேவை ஆரியருக்கு எழலாயிற்று. அதிலே மதிநுட்பம் சேர்க்க வேண்டியதாயிற்று. சிவாலயத்தில் ஏனைய தெய்வங்களையும் தாபித்து புத்தர், அருகர் ஆகியோரர் சிவனதும், மகாவிஷ்ணுவினதும் அவதாரங்களே எனும் புராணக் கதைகளையும் புனையலாயினர். முன்னைய வழிமுறைகளில் இருந்து நீங்கி புத்த, சமண வழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆரியர் மாமிசங்களை மட்டுமல்ல உயிர்க்கொலை, திருட்டு, பொய் இவை எல்லாமே பாதகங்கள் என்பதை இந்துக் கடவுளரின் எச்சரிப்பாக விடுத்தனர்.

இவ்வாறு நெறி முறைகள் வகுத்தும் மக்கள் மத்தியில் எழுந்த சமண புத்தத்தின் தாக்கத்தை ஆரியரால் சமாளிக்க முடியவில்லை. இயற்கையிலே மக்களிடம் ஊறிக்கிடந்த போக போக்கியம் மலிந்த காம உணர்வை தட்டி எழுப்புவதே மக்களை இந்து மார்க்கத்தில் திசை திருப்பும் ஒரே வழி என்ற முடிவுக்கு வரலாயினர்.

அதனால் இந்து மார்க்கத்தில் 'காமவியல்' என்பது கரைபுரண்டு ஓடுவதாயிற்று.

இன்றைய விஞ்ஞானிகள் Five Elements - எனப்படும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், என்னும் ஐம்பூதங்களின் தத்துவமாக சிவநடனத்தை(நடராஜர்) கண்டு அதிசயிக்கிறார்கள். அணுவின் சேர்க்கை, பிரிகை பற்றிய சிறந்த விஞ்ஞான தத்துவங்கள் இந்து மதத்திலே பிணைந்திருப்பது கண்டு வியப்படைகின்றார்கள்.

இந்துக்களின் பரம்(பொருள்) பரா(சக்தி) என்பது, விஞ்ஞானிகளுக்கு பொருளும் சக்தியுமாகப் பேசும் தமது விஞ்ஞானக் கொள்கைக்கு உடன்வரக் காணுகிறார்கள். புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வானூர்தி .... எனும் சங்க இலக்கியத்தில் 'வானூர்தி' பற்றிய குறிப்பு உண்டு.

17ம் நூற்றாண்டு விஞ்ஞானிகளின் Non compresibility of Liquds எனும் திரவங்களின் சுருங்காத இயல்பு பற்றி "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் தாழி முகவாது தால் தாழி" என அவ்வையார் பாடலில் இடம் பெற்றுள்ளது.

"தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் அணுவைச் சத கூறிட்ட கோணிலும் இருப்பான்" என்ற பாடலில் அணுவை பிரிக்கும் முறைபற்றி தமிழர்தம் விஞ்ஞான நுண்ணறிவை உணர முடிகிறது.

தொல்காப்பியத்தில் சோதிடத்திற்கு உரிய 'ஓரை' கிரேக்கத்தின 'ஹோரா' ஆகும்.

இவை பழைய நாகரிக நாடுகளான பபிலோன், கிரேக்கம் மற்றும் கடல் கொண்ட நாடுகளுடன் தமிழருக்கு இருந்த தொடர்பைப் புலப்புடத்தும்.

ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகியன தமிழகம், ஈழத்துடன் கடல் கொள்ளுமுன் ஒரே நிலப்பரப்பாக இருந்தபோது, மிகவும் உன்னதமான நாகரிகத்தில் தமிழர் வாழ்ந்திருக்கிறார்கள்.

இந்த நுண்ணறிவுகள் புலப்படா வகையில் சாதாரண தமிழர்தம் வாழ்வியலோ பின்னாளில் மூடமை தழுவிய பிற்போக்கான சிந்தனைகளுக்குள்ளேதான் முடக்கப்பட்டது.

தமிழர் தெரிந்து வைத்தது எல்லாம் தமது கடவுளரும் தம்போல போக போக்கிய விற்பன்னர்கள் என்பதே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிருநந்தயைக் கண்டு காக்கும் தெய்வமான திருமாலே மோகிக்கிறாராம்.
படைத்தல் கடவுளான பிரம்மாவோ திலோத்தமையில் மையல் கொள்கிறாராம்.
தேவர் தலைவன் இந்திரனோ முனிவரின் பத்தினியான அகலிகையில் காமவசம் ஆகிறானாம்.
இது தவிர, தாரையிடம் சந்திரனும், மேனகையிடம் விசுவாமித்திரனும் அருந்ததியிடம் வசிட்டரும் மையல் கொள்ளுகின்றனராம்.

தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியரோ உலோபமுத்திரையை காமிக்கிறாராம். சிவனுக்கு கங்கை என்ற வைப்பாட்டியாம்.
சிவன், சனாதன முனிவர்களின் மனைவியரை மயக்கி தன் பின்னே காமத்தால்தொடரச் செய்தாராம்.
முருகனுக்கு இரு மனைவியராம். பிரமச்சாரியாக கற்பிதம் செய்யப் பெற்ற விநாயகருக்கு கூட சித்தி, புத்தி என இரு மனைவியராம்.
இதனை தெல்காப்பியம் இவ்வாறு இனங்காட்டும்.

" காமப் பகுதி கடவுளும் வரையா
ரேனோர் பாங்கினு மென்மனார் புலவர்."

(இதன் பொருள், கடவுளிடம் கடவுள் பெண்டிர் காமுறுவர்; கடவுளிடம் மானிடப் பெண்ணும் காமுறுவாள்; கடவுள் மானிடப் பெண்ணிலும் காமுறுவர்.)

தமிழர்தம் ஆய்வு, மூடமைத் தழுவலில காமச் சுவையுடன் முடக்கப் பெற்று அவர்தம் சுகாதாரதேவைக்கு தெய்வபயம்கற்பிக்கப் பெற்றது.
அவையே மத அடையாளங்களாக மக்கள்முன் நிற்பவை.

பசுவின் சாணத்திலே பிள்ளையார் பிடித்து அதிலே அறுகம் புல் செருகி வழிபட்டனர். அம்பாள் கோபம் கொண்டு தொற்று நோயை பரப்பாது சாந்தப்படுத்தவும பேயை ஓட்டித் துரத்தவும் என வேப்பிலையை உபயோகித்து, மஞ்சளையும் அவ்வாறே தெளித்து தெய்வ அனுக்கிரகம் பெற்று விட்டதாக திளைத்தனர்.

பசுவின் சிறுநீர், சாணகம் கோசலம், கோமயம் எனப்படும்.
சாணகம், வேப்பிலை, அறுகம்புல், மஞ்சள் இவை அனைத்துமே தொற்றுக்கிருமிகளைத் தடுப்பவை, நோய்தீர்ப்பவை.

சுகாதார, மருத்தவ வசதிகள் அற்ற அந்த நாளில உடல், உளக் கோளாறுகளை வேப்பிலையே நீக்கி உதவி இருக்கிறது.
அது, தெய்வத்திற்கு உகந்த பொருளாக(வேப்பிலைக்காரி) மதிக்கப் பெற்றது.
திருவிழாக்காலத்தில் சனக்கூட்டங்களில் 'வேப்பிலை ஆட்டங்கள்' எல்லாம் கெட்ட காற்றினால் தொற்று நோய் பரவாது தடுப்பதற்காகவே எழுந்தவை.
வேப்பிலையை சர்வரோக நிவாரிணி என சித்த ஆயுர்வேத மருத்துவம் தெரிவிக்கின்றது.
கற்பூரம், சாம்பிராணி ஆகியவை காற்றை தூய்மைப் படுத்தவே பயன்படுத்தப் பட்டன. சூரியனின் அதிகூடிய வெப்பம் மனிதரை பித்தம் படிக்க வைத்துவிடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அதனால் மனிதனுக்கு வெறிபிடித்து விடும். உடலைக் குளிர்மைப் படுத்தி உளத்தை சாந்த மாக்க 'சந்தனம்' இடும் முறை உருவாக்கப்பட்டது.
மனிதனின் முக்கிய பகுதியாகிய 'நெற்றிப் பொட்டு (spot) அமைந்திருக்கிறது.

அதுவே, சிந்தனை முடிச்சு. அவ்விடத்தை அறிந்து பொட்டிட்டது கூட சக்தி வாய்ந்த இன்னொருத்தரக்கு வசியம் ஆகாமல் (Mesmerism) காப்பதற்கே. (சிவனது நெற்றிக் 'கண் பற்றிய கதைகள் இதிலிருந்தே பிறந்தவை)
நீராடும் போதும், மழையால் நனையும் போதும் நீர் உட் சென்று சளி, காய்ச்சல் முதலியவை ஏற்படாமல் தடுக்கவும், சூரிய ஒளியால் உடல் பெறும் ஆரோக்கியத்தை ஊட்ட வல்லதுமான 'திருநீற்றை' தரித்தனர்.
இரத்த அழுத்தம் (Blood Presser) முதலியவை ஏற்படாமல் இருக்க 'உருத்திராக்கம்' அணிந்து கொண்டனர்.
சிவ சின்னம் எனப்படும் திருநீறு, சந்தனம், உருத்திராக்கம் என்பவை மனித ஆரோக்கியம் கருதியே எழுந்தவை.
இவை தவிர உடலில் பாயும் மின் அலையை கடத்தும் ஆற்றல் தர்ப்பைப் புல்லுக்கு உண்டு.
தீட்டு என்றும் துடக்க என்றும் தெய்வ பயம் காட்டப் பெற்றன.
அவை கூட சுகாதார நோக்கிலேயே எழுந்தன.
பின்னாளில் ஆரியர் வழி சூத்திரரான முழுத் தமிழனமும் தத்தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட தீண்டாமை எனும் விரிசல் நோய் அதிலிருந்தே பிறந்தது.
தீண்டாமை எய்தி நின்ற தமிழர்தம் கண்களைத் திறந்து வந்த சமண, புத்தர்களை முறியடிக்க ஆரியர் சமரச உடன் பாடுகளிலும் இறங்கி இருக்கறார்கள்.
"மாட்டிறைச்சி உண்ணும் புலையன் கூட சிவ பக்தனாகில் அவனுக்கு தாம் அடிமை என முழக்கம் இட்டனர்.
காம சிந்தனையில் மூழ்க வைத்து துறவற சமண புத்தர்களை ஒழித்துக் கட்டினர். சூத்திரரான தமிழர் குடியிலே பிறந்து சமணர்களின் மதிப்பிற்கு பாத்திரமாக அவர்களது மதத்திலே பிரதம துறவியாக 'இருந்த 'தருமசேனர்' எனும் அப்பர் சுவாமிகள் மீண்டும் சைவத்திற்கு திரம்பிய போது வயது முதிர்ந்து விட்டது.
அந்த தள்ளாத வயதிலும் அவர்தம ஏக்கம் 'காமம்' பற்றியதாகவே இருந்திருக்கிறது.

"தளையவிழ் கோதை நல்லார்
தங்களோடு இன்பம் எய்த
இளையனும் அல்லேன் யானே
என்செய்வேன் மயங்கினேனே."

(அப்பர் தேவாரம்)

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகஸ்தியர்

சமுதாயப் பிரச்சனைகளை வரலாற்றினூடாகவும், தர்க்கவியல் விஞ்ஞான கண்ணோட்டத்தோடு ஈழத்து இலக்கிய உலகில் சுமார் ஐம்பது ஆண்டு காலமாக தமிழ் உலகிற்குத் தொண்டாற்றியும், தன் இறுதி மூச்சு வரையும் விடாது எழுதி வந்தவருமான அகஸ்தியர் பரிசில் 08.12.95ல் இயற்கை மரணம் எய்தியமை தமிழ் கூறும் நல்லுலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

29.8.1926இல் யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டை சவரிமுத்து அன்னம்மா தம்பதியரின் மூன்றாவது புதல்வராவர். 1983ம், ஆடி இலங்கை இனக்கல வரத்தினால் பாதிப்புக்குள்ளாகி மனைவி, பிள்ளைகளுடன் பிரான்சில் 1986ம் ஆண்டில் அரசியல் தஞ்சமடைந்தார்.

அகஸ்தியர் முதன் முதலில் கவிதையோடு இலக்கிய உலகில் பிரவேசித்தார். அதன் பின் அவர் 360 சிறு கதைகள், 40 குட்டிக் கதைகள், 10 குறு நாவல்கள், 9 நாவல்கள், 100க்கு மேற்பட்ட கட்டுரைகள், விமர் சனங்கள், ஆய்வுகள் 20, வானொலி நாடகங்கள், நாட்டு கூத்து நாடகங்கள், "உணர் வூற்றுருவச் சித்திரம்" என்ற புதிய இலக்கிய வடிவம்- என்றெல்லாம் எழுதியுள்ளார். இவர் நல்ல விமர்சகர். இருபது புனைபெயரில் எழுதி வந்துள்ளார். கர்நாடக இசையிலும் மிருதங்கம் வாசிப்பதிலும் பரீட்சயம் உள்ளவர்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக் குழு உறுப் பினரான அகஸ்தியர் இலங்கையின் சகல பத்திரிகைகள், சஞ்சிகை களிலும், லண்டன் பி. பி. சி. தமிழோசை இந்தியாவில் "தாமரை", "எழுத்து", "கலைமகள்", "தீபம்", "ஜீவா" கண்ணதாசன் ஆகிய சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். ஐம்பது ஆண்டுகளாக இலக்கியப் பணியில் ஈடுபட்டுள்ள இவர் "தாமரை"யில் தொடர்ந்து எழுதி வந்துள்ளார். சிங்களம், மலையாளம், ருஸ்ய மொழிகளில் இவர் ஆக்கங்கள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

அகஸ்தியர், இளமைக் காலம் தொட்டு இலங்கையில் இருக்கும் வரை கம்யூனிஸ்ட் கட்சியில் ஓர் அங்கத் தவராகச் செயல்பட்டு வந்தார். இவர் இறக்கும்வரையும் ஒரு கம்யூனிஸ் டாகவே இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கால் மார்ஸ்சின் பொதுவுடமை வரலாற்று விஞ்ஞான பூர்வ தர்க்கவியல் சோஸலிச சித்தாந்தத்தில் உறுதியான நம்பிக்கையுடையவராவர். இவருடைய எல்லா ஆக்கங்களும் சரித்திர விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டவையே. இவர் ஆக்கங்கள் என்றும் அழியா வரம் பெற்றவை.

*எம். எஸ். கே*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# நன்பனுக்கு

நண்பனே !
உனது
கடிதம்
கிடைத்தது !

எப்பொழுதும்
உனது
நினைவையே
என்
இதயத்தில்
தடம் பதித்து
வைத்திருக்கிறேன் !

இன்று
நீ
இல்லை

நான்
உச்சரிக்கும்
வார்த்தைகள்
எழுதும்
எழுத்துக்கள்
இவற்றில்
நீ
வாழுகிறாய் !

பனி
படர்ந்த
இந்தத்
தேசத்தில் !

நான் மகிழ்சியோடு
இருப்பதாக
நீ
எழுதியிருந்தாய் !

அதில் உண்மை
இல்லை !
என்
தேசத்து
நினைவுகளில்
உணர்வுகளில்
நான் வாழ்ந்து
கொண்டிருக்கிறேன் !

விழுதுகள்
பரப்பி
உயர்ந்து
பரந்திருந்த
எங்கள்
குடும்ப
விளக்கு !

எண்ணையின்றி
உறக்கமின்றி
அலையும்
இந்தநாளில் !

நான்
எப்படி
மகிழ்ச்சியாக
இருக்க
முடியும் !

நண்பனே !
தன்
இச்சையாகப்
பூத்துக்
குலுங்கும்
கொண்டல்
மரம்போல

அந்த
நாட்களில்
தனியாக
ஒளிபரப்பி
இன்று
மறைந்து
விட்டாய் !

உனக்காக
இன்று
வார்த்தைகளை
மட்டுமே
உதிர்க்க
முடியும்

பூ
மலர்வதும்
வாடுவதும
இயல்பானது !

என்றாலும்
மலர்ந்த
இந்த
நாட்களில்
மறைந்தது !

எனக்கு
நிறைவாக
இல்லை
நாளைய
பொழுது
எனக்காக
விடிய
வேணடும் !

www.tamilarangam.net



என்று
நீ
மறைவாக
எழுதியது
எதற்காக !

எனது
பதில்
காண
உயிருடன்
நீ
இருக்கமாட்டேன்
என்பதற்காகவா
எங்கள்
கிராமத்துத்
தெருக்களிலே
தென்றல்
தீண்ட
நடந்ததுவும்
கொள்கை
விளக்கங்கள்
தந்ததுவும் !

எங்கள்
தாயகம்
நெருப்பு
ஆற்றினில்
எரிந்து
போனது !

நீறு பூத்த
தனலிலே
இன்று
நீ
நீறாகிப் போனது
கொடுமையே !

நாசம்
வந்த
என் தாயக
மண்ணில் !

விடுதலையோடு
நீ
மறுபிறப் பெடுப்பாய்

அன்று
எங்கள்
பொழுது
விடியும் !

மலர்ந்து
என்
ஈழம்
விடுதலை
கொள்ளும் !

இளசுகள்
சிந்திய
இரத்த
அணுக்கள்
மீண்டும்
பிறக்கும்
சுதந்திரம்
எடுக்கும்.

*–அருண்*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## தமிழ்த் தியாகிகள்......

பெற்றவர்கள்
எங்களை
பொன்னுச்சாமி.....
சாமிக்கண்ணு.....
என்றுதான்
கூப்பிட்டார்கள்.
அதனால் எனக்கும்
நண்பனுக்கும்
தமிழிலே
வெறுப்பு.....

அகதியானதும்
தன்னை
எஸ். பி. கண்!
என்றான் நண்பன்.
நானும்
பி. எஸ். சாம் என்றேன்.
புறப்படுகிறோம்.....
இன்பத் தமிழை
வாழவைக்க வேண்டும்!

*–கவிஞர் சி. மோகனசுந்தரம்–*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# டென்மார்க்கில் வேலைவாய்ப்புக்களில் சிறுபான்மையினத்தவர்.



## *கோர்னிங் மாநாடு சாதகமாக அமைந்தது.*

சிறுபான்மையினர் வேலைவங்கியும், உள்நாட்டமைச்சின், IND-SAM அமைப்பும் சேர்ந்து தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியம், SID ஆகியன இணைந்து சிறுபான்மையினரின், வேலை வாய்ப்புக்கள் பற்றி மாநாடு செப்தெம்பர் 4ம் திகதி SID-Herning மண்டபத்தில் நடாத்தினர். இந்த மாநாட்டின் நோக்கம் சிறுபான்மையினத்தவரின் வேலைவாய்ப்புக்கள் நிலையை வெளிப்படுத்துவதும், அனுபவங்களைப் பரிமாறுவதும், தீர்வுத் திட்டங்களைப்பற்றி கலந்துரையாடுவதுமாகும்.

தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றிய பிரதிநிதி Thorbjørn Lorentzen மாநாட்டைத்- தொடக்கிவைத்துப் பேசுகையில், சிறுபான்மையினத்தவர்களைப்பற்றி வேலைவாய்ப்புகளில் ஒரு பெரும்பிரச்சனை என்னவெனில், "அவர்கள்", "எங்கள்" எனப் பிரிப்பதும் அவர்கள் பிழையானவர்கள், எங்கள் என்பதன் அர்த்தப் சரியானவர்கள் என்கின்ற மனோபாபம் உள்ளது. சிறுபான்மையினத்தவருக்கும் டெனிஸ் இனத்தவரைப்போல் சம உரிமையும், வாய்ப்பும் உண்டு என்பதை யாவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

கலாச்சார நிகழ்ச்சி

SID-Herning கிளையின் உபதலைவர் Lars Christensen தமதுரையில், அவர்களுடன் வேலைசெய்வது வேலையாட்களிடையே முரண்படும் என்பது சிறுபான்மையினத்தவரை ஒடுக்குவதாகும். இதை வென்றெடுக்க தேவையான கலாச்சார புரிந்துணர்வை ஏற்படுத்தவே எமது கிளை ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து கிட்டத்தட்ட 1000 பேர் கலந்துகொண்ட கலாச்சார நிகழ்ச்சியை செய்தோம் என்றார்.

டெனிஸ் அகதிகள் சபை பிரதிநி Henning Jul தமது முன்மொழிவில், அகதிளுக்கும், குடியேறியோர்க்கும் பகுதிநேர மொழிவகுப்புக்களுடன், உறுதியான திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் வேலைமுறைகளை புரிந்து கொள்ளவும், சமுதாயம் அவர்களிடம் எதிர்பார்ப்பதை புரிந்துகொள்ளவும் முடியும் என்றார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**Århus kommune, F.I gruppen** பிரதிநி **Jørn Melgård,** "பொறுப்பு" என்றால் என்ன என கேள்வியெழுப்பி, பயன் தரக்கூடிய அணுகுமுறைகளை கையாள வேண்டும் என்றார். மேலும் தெரிவிக்கையில், சட்டவிதி 43ன்படி வழங்கப்பட்டு வந்த வேலைவாய்ப்பு உதவி, தனது அனுபவத்திலும் பொதுவான ஒப்புதலிலும் நிறுத்தப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு பிராந்தியங்களுடனும், தொழிற்சாலைகளுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்தி தேவைகளை அறிந்து திட்டமிடவேண்டும். இதற்கு உதாரணமாக **MD Food** தொழிற்சாலையில் இன்று 11% சிறுபான்மையினத்தவர் உள்ளதை சுட்டிக்காட்டினார்.

**Mehmet Simsek** குறிப்பிடுகையில், ஒவ்வொருவரையும் தனித்தனியே எடுத்து வழிவகுக்காமல் ஒழுங்குமுறையில்லாமல் **AMU** க்கு அல்லது ஏதாவதொன்றிற்கு அனுப்புவதைச்சுட்டிக்காட்டினார். **Grethe Enevoldsen** குறிப்பிட்டதைப்போல் தொழிலமைப்பு நிறுவனங்களின்பங்கே முக்கியமானது என்றார். எல்லோருக்கும் வாய்பளிக்கவேண்டுமென்பதை நிறுவனங்கள் தமது உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கவேண்டும் எனவும் கூறினார். இதை உறுதிப்படுத்தி குகதாசனும், திருரவிச்சந்திரனும் தாம் கல்வியில் திறமையான தராதரங்களைப்பெற்றும் எண்ணற்ற விண்ணப்பங்கள் அனுப்பியும் ஒரு இடத்திலிருந்தும் கூட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட வில்லை எனக்குறிப்பிட்டனர்.

இந்த மாநாட்டில் **Eva Sivebæks** ன் முன்வைப்பு குறிப்பிடக்கூடிய உதாரணங்கள். கேர்ணிங் மாநகரசபையில் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் சிறுபான்மையினத்தவர் பலர் வேலைவாய்ப்புப்பெற்றுள்ளனர்.
மாநகரசபை சிறுபான்மையினத்தைச்சேர்ந்த சமூகஆலோசகரை கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

புதிய வடிவம்.

**Hejne Svestrup,** சர்வதேச கல்வி-வேலைவாய்ப்பு திட்டக்குழு, தெரிவிக்கையில், தமது குழு வெளிநாட்டவருக்கு கல்விவாய்ப்புக்களை செய்துவருவதாகவும், புதிய பரிமாணங்கள் நிறைவுதருவதாக குறிப்பிட்டார். உதாரணத்திற்கு, மாநகரசபைகள் சமூகஒருங்கிணைப்பு வேலைகளை ஆரம்பத்திலிருந்தே பொறுப்பெடுக்கின்றன. இதனால் நேரடியாகவே டெனிஸ் சமூககட்டமைப்புக்குள் காலடியெடுத்துவைக்கவும், வேலைபிரதிநிதியைப் பெறவும் வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். இன்றுள்ள சர்வதேசமயமாக்களில், சர்வதேச வேலைவாய்ப்புச் சக்தியை குறிப்பாக டென்மார்க்கில் உள்ள சிறுபான்மை இனத்தவர்களை பயன்படுத்தவேண்டும். இதற்குப்பதிலாக அவர்களது சமூக பரம்பரையைப்பற்றியும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விசேடங்களைப்பற்றியும் வெளிப்படுத்துவது அவர்களது திறமைகளை மழுங்கடிக்கச் செய்வதாக அமையும் எனக்குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் **Mehmet Simsek** ன் சொந்த வேலைத்தளத்தை அமைத்துக்கொண்ட அனுபவம் சிறப்பாக அமைந்தது. 1987ல் கோர்ணிங்கில் **Budstikken** எனும் தபால் சேவையை ஆரம்பித்தார். இன்று அவரது தொழிலகம் 8 வாகனங்களையும் 10 தொழிலாளர்களையும் கொண்டுள்ளது. அது முன்னுரிமை கொண்ட தராதரத்திலுள்ளது. **Mehmet Simsek, K-S-P** எனும் தொழிற் கொள்கையை கடைப்பிடிக்கிறார். அதாவது, வாடிக்கையாளர் – சேவை – வருமானம். அவரது கருத்துப்படி, சமூகஒருங்கிணைப்புக் கொள்கை ஒரு பிழையானது. ஏனென்றால், சிறுபாம்மையினர் தமது விருப்பங்களையும்–தேவைகளையும் எடுத்துக்கூறும் வாய்ப்பற்றவர்களென டெனிஸ்மக்கள் விளக்கம்கொள்கிறார்கள் எனத்தெரிவித்தார்.

**Horsens Kommune** சமூக ஆலோசகர், **Niels Jacobsen** தெரிவிக்கையில், **AMU** கல்வி மற்றும் குறுகிய வேலைவாய்ப்புக்களில் ஈடுபடும் சிறுபான்மையினத்தவர்கள் நிரந்தர வேலைவாய்ப்புப்பெறுவது மிக அரிது. இதனால் **Iværksætterhus** எனும் திட்டத்தை ஆரம்பித்து இதன் மூலம் சிறுபான்மையினர் சொந்தமாக தொழில் ஆரம்பிக்க உதவிவருவதாக கூறினார்.

மொத்தத்தில் கோர்ணிங் மாநாட்டின் வெளிப்பாடு:
சிறுபான்மையினத்தவர்கள் செயலில் இன்னமும் இறங்காமைக்குக்காரணம் –

1. என்னால் எல்லாம் முடியும்,
2. வெறுமையாகவுள்ளது.(எல்லாம் எனக்கெதிராகவுள்ளது)

டெனிஸ்மக்களிடமில்லாத சிறுபான்மையினரிடமுள்ள அறிவை, திறமையை இந்த சமுதாயம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

- தமிழாக்கம் குகன்.




உங்கள் கம்பியூட்டரில் ஏதாவது பிரச்சனையா? அல்லது கம்பியூட்டர் பற்றி ஆலோசனை தேவையா? உங்கள் தேவைகளுக்கேற்ப உதவி வேண்டுமா? அனுபவம்வாய்ந்த நுட்பவியளாளருடன் தொடர்பு கொள்ளவும். **தொலைபேசி எண். 97 25 09 17 குகன்.**

www.tamilarangam.net



பல ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக இலங்கையின் பல பாகங்களில் மிகவும் துன்பப்படுகிறார்கள். இவர்களுக்கு வதிப்பிட வசதியல்லை, உணவுத் தட்டுப்பாடு (ஒரு நேர உணவுகூடக் கிடைப்பதில்லை), இதற்கும் மேலாக நோயினால் பாதிக்கப்பட்டும் வருகிறார்கள்.

**இவர்களில் உங்கள் குடும்பத்தினர் அல்லது அத்துடன் உறவினர்களும், சிநேகிதர்களும் அடங்குவார்கள்.**

**அவர்களுக்கு உங்களின் உதவி அவசியம் தேவைப் படுகின்றது.**

தமிழ் மக்களுக்கு, பல ஆண்டுகளாக உதவி செய்து வரும், பலகால அனுபவம் கொண்ட டெனிஸ் கிறிஸ்தவ உதவி நிறுவனத்தினூடக, பணத்தை அனுப்பி உதவுவதே ஒரே வழியாகும். இவ் நிறுவனத்திற்கு தமிழர்கள் வாழும் பகுதிகளில் பல நேரடித் தொடர்புகள் உண்டு.

**உங்களுக்கு கேள்விகள் இருப்பின்,**

Thorbjørn Lorentzen tlf 97 16 42 77 அல்லது து.செல்வக்குமார் 97 12 55 93 அல்லது Gulli Jakobsen tlf . 33152800 (Folkekirkens Nødhjælp) உடன் தொடர்பு கொள்ளவும்.

**நீங்கள் பணம் செலுத்த வேண்டிய** Giro இல. **540 – 0023**

Folkekirkens Nødhjælp
Nøregade 13
DK-1165 København K

**இன்றே தபாற்கந்தோருக்கு சென்று பணத்தைச் செலுத்தி உதவுங்கள்.**

# அறம் செய்ய விரும்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சிறுவர் பகுதி

**அன்பான சகோதர சகோதரிகளே,**

இந்த மாதிரி வினாத்தாள் மூலம் உங்களை சிறுவர் பகுதி அங்கத்திற்கு அழைக்கிறேன். இவ் வகையான மாதிரி வினாத்தாள் உங்களை பரீட்சைக்கு தயாராக்கவும், தெரியாத விடயங்களை உட்கிரகிக்கும் நுழை வாயிலாகவும் உள்ளது. 1996 ம் ஆண்டு புரட்டாதி மாதம் நடைபெற விருக்கும் போட்டிப் பரீட்சைக்கு இவ்விதமான கேள்வி முறைகளையே நாம் பெரிதும் பயன்படுத்துவோம் என்பதை மாமா தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சகோதர சகோதரிகளே, உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் ஏற்படின், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் தொடர்பு கொண்டால் விடையை மிக விரைவில் மாமா எழுதி அனுப்புவார்.

அத்துடன் உங்களது விடைகளை, மிகவும் தெளிவாக எழுதி கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பினால், Children chanal மாமா திருத்தி அனுப்பி வைப்பார்.

**அனுப்ப வேண்டிய முகவரி:-**

Children Chanal
Svendsgade 58
7100 Vejle.

**மாதிரி போட்டிப் பரீட்சை - 2 - 1996**

**இப் பந்தியைப் படித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

யாழ்ப்பாணத்தில் உள்ள மட்டுவில் என்னும் கிராமத்தில் உரையாசிரியர் குடும்பத்தில் சின்னத்தம்பி என்பவர் ஒருவர் இருந்தார். சின்னத்தம்பி அவர்களுக்குத் தவப்புதல்வனாகப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பிறந்தார். பிறந்த நட்சத்திரம் சதயம் என்பதாகும். தந்தையாரின் குணங்கள் மகனிலும் சிறு வயதிலேயே பிரகாசித்தன. சின்னத்தம்பி அவர்கள் இராமாயாணக் கதைகள் சொல்லுவதில் வல்லவர். மகனையும் சிறந்த தமிழ்க் கல்வி கற்பிக்க எண்ணினார். முதலில் சாவகச்சேரியில் உள்ள இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்கவைத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1. 1. பண்டிதமணி பிறந்த கிராமம் யாது ?
2. பண்டிதமணியின் தந்தையார் பெயர் என்ன ?
3. சதயம் என்னும் நட்சத்திரத்தில் பிறந்தவர் யார் ?
4. சின்னத்தம்பியாரின் எண்ணம் யாது ?
5. இராமாயணத்தைச் சொல்லுவதில் யாருக்கு வல்லமையுண்டு

புள்ளி 5. 2 = 10

2. **பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. நான் தோசை திண்டனான்.
2. அவை வாறமெண்டு சொல்லிச்சினம்.
3. வாழைப்பழத்துக்கை புழுக்கிடந்திச்குது.
4. அவர்கள் என்னை திட்டினவை.
5. புளி காட்டில் வாழும்.

புள்ளி 5. 2 = 10

3. **பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக ?**

1.இந்த ஊரில் ...............................இல்லாதவர்கள் பலர் உண்டு.
**(வேலை வேளை)**

2.நான் ஒரு நாளும் .............................யில் ஏறியதில்லை.
**(மழை மலை)**

3.எல்லோரும் பொதுவாகப் .......................க்குப் பயப்படுவார்கள்.
**(புலி புளி)**

4. பூனையின்.......................யைக் கேட்ட எலிகள் பயந்து ஓடின.
**(ஒலி ஒளி)**

5.இந்த வயலில் நிரம்பப் ....................... முளைத்திருக்கின்றன.
**(புல்லு புள்ளு)**

6.வீட்டுக்கு மேலே ...................... லொன்று விழுந்தது.
**(கள் கல்)**

7.அவன் கூலிக்காக........................ செய்தான்.
**(வேலை வேளை)**

8.ஏழையைக் கண்டால் சிலர்.................... நகையாடுவது .......................
**(எல்லி எள்ளி – வளக்கம் வழக்கம்)**

9.நாய்................. ஆட்டியது.
**(வாலை வாழை)**

10.எனது புத்தகத்திற்கு.................... போடப்பட்டிருக்கின்றது
**(உறை உரை)**

புள்ளி 10 . 3= 30



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


4.கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.

உ + ம்: நாம் வாயினால் ........................... பேசுகின்றோம்.

1. நாம் கண்களினால் ..................................
2. நாம் காதுகளினால் ..................................
3. நாம் கைகளினால் ..................................
4. நாம் கால்களினால் ..................................
5. நாம் மூக்கினால் ..................................

புள்ளி 5 . 2 = 10

5. பறவை இனம் 5 எழுதுக.

1. .............................. 2. .............................. 3. ..............................

4. .............................. 5. ..............................

புள்ளி 5 . 2 = 10

6. காட்டு மிருகங்கள் 5 எழுதுக.

1. .............................. 2. .............................. 3. ..............................

4. .............................. 5. ..............................

புள்ளி 5 x 2 = 10

7. பழங்களின் பெயர்கள் 5 எழுதுக.

1. .............................. 2. .............................. 3. ..............................

4. .............................. 5. ..............................

புள்ளி 5 x 2 = 10

8. பூக்கள் ஐந்தின் பெயர் எழுதுக.

1. .............................. 2. .............................. 3. ..............................

4. .............................. 5. ..............................

புள்ளி 5 x 2 = 10


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்து கலாச்சார ஆராய்ச்சி தகவல் நிலையம்
தபால் பெட்டி இல - 317
7400 கேர்ணிங்

# இந்து மக்களுக்கு டென்மார்க் சித்தி விநாயகர் ஆலயத்தின் அறிவித்தல்

மெய்யடியார்களே!

சித்திவிநாயகர் ஆலயம் அமைப்பதற்கு புதிய கட்டிடம் வாங்கப்பட்டுள்ளது. இவ் வருடம் நடைபெறவுள்ள அலங்கார உற்சவத் திருவிழா, புதிய கட்டிடத்தில் பங்குனி உத்தரத்துடன் விநாயகப் பெருமானையும், பார்வதி பரமேஸ்வரரையும் பிரதிஸ்டை செய்து தொடர்ந்து பத்து நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. ஆகவே திருவிழாவிற்கு உபயம் செய்ய விரும்புவோர் தங்களது பெயர், விபரங்களை 01. 03. 96ம் திகதிக்கு முன் ஆலயத்தில் அல்லது நிர்வாகத்தினரிடம் ( தொ. பே. இல. 97 21 37 69, 97 22 09 48 ) பதிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதிய ஆலயத்தில் சித்தி விநாயகரையும் பார்வதி பரமேஸ்வரரையும் அமர்த்துவதற்கு அவசர நிதி தேவைப்படுகின்றது. ஆகவே கட்டிட நிதிக்கு பணம் எழுதியோரும் அன்பளிப்பு செய்ய விரும்புவோரும் தங்களால் இயன்ற நிதியைக் கொடுத்து ஆலய வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் புதிய ஆலயத்தில் பல திருப்பணி வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. பூந்தோட்டம் அமைத்தல் கார் தரிப்பிடம் அமைத்தல் சுற்று மதில் அமைத்தல் வர்ணம் தீட்டுதல் சிற்ப வேலைகள் சித்திர வேலைகள் போன்ற பல வேலைகள் வெய்ய வேண்டியுள்ளது. இவற்றிற்கு பல லட்ச குறோணர் நிதி தேவைப்படுகிறது. இப்படியான திருப்பணி வேலைகளை தனியாகவோ அல்லது கூட்டாகவோ செய்ய முன் வருவோர்களை ஆலயத்தின் நிர்வாகத்தினர் வரவேற்கின்றார்கள்.

நன்றி.

இப்படிக்கு,
நிர்வாகம்.

**Teglvænget 9**
**7400 Herning**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## சித்திரை, வைகாசி மாதங்களில் வரும் விஷேட இந்து தினங்கள்

| April (ஆங்கிலம்) | சித்திரை (தமிழ்) | | விரதாதி நிரூபணம் |
|---|---|---|---|
| 13. 04. 96 | 1 | சனி | தாதுபுதுவருடப் பிறப்பு |
| 15. 04. 96 | 3 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 17. 04. 96 | 5 | புதன் | அமாவாசை விரதம் |
| 20. 04. 96 | 8 | சனி | கார்த்திகை விரதம் |
| 21. 04. 96 | 9 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| 29. 04. 96 | 17 | திங்கள் | ஏகாதாசி விரதம் |
| 30. 04. 96 | 18 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| May | | | |
| 02. 05. 96 | 20 | வியாழன் | சித்திரைச் சித்திரை |
| 03. 05. 96 | 21 | வெள்ளி | பூரணை விரதம் |
| | வைகாசி | | |
| 14. 05. 96 | 1 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| 17. 05. 96 | 3 | வெள்ளி | அமாவாசை விரதம், கார்த்திகை விரதம் |
| 21. 05. 96 | 7 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 28. 05. 96 | 14 | செவ்வாய் | ஏகாதாசி விரதம் |
| 30. 05. 96 | 16 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 31. 05. 96 | 17 | வெள்ளி | வைகாசி விரதம் |
| June | | | |
| 01. 06. 96 | 18 | சனி | பூரணை விரதம் |
| 13. 06. 96 | 30 | வியாழன் | பிரதோஷ விரதம் கார்த்திகை விரதம் |
| | ஆனி | | |
| 19. 06. 96 | 05 | புதன் | சதுர்த்தி விரதம் |
| 23. 06. 96 | 09 | ஞாயிறு | ஆனி உத்தரம் |
| 27. 06. 96 | 13 | வியாழன் | ஏகாதாசி விரதம் |
| 28. 06. 96 | 14 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 30. 06. 96 | 16 | ஞாயிறு | பூரணை விரதம் |

இவ் விஷேட தினங்களுக்கான அட்டவணையை தயாரித்து உதவியவர்

*ம.கணேசசர்மா* **Billund**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

**யாழ் போதனா வைத்தியசாலை நிவாரண நிதிக்காக டென்மார்க்கிலுள்ள இசைக் குழுவினர்களால் சேகரிக்கப்பட்ட பணத்தின் வரவு செலவு அறிக்கை**

**தகவல்:எம்.பி.ஆரோக்கியநாதன்.**

| | | |
|---|---|---|
| **வரவு** | | |
| Herning விழாவின் போது சேகரிக்கப்பட்ட தொகை. | | 53770.00 |
| பின்பு சேர்க்கப்பட்ட பணம். | | 6250.00 |
| Canteen ஏலவிற்பனை வரவு. | | 3250.00 |
| **வருமதியாகவுள்ள பணம்** | | |
| வருமதியாகவுள்ள தொகை A | 12200.00 | |
| வருமதியாகவுள்ள தொகை B | 1500.00 | |
| **செலவு** | | |
| Herning விழா செலவு. | 5960.00 | |
| København விழா போக்குவரத்துச் செலவு. | 8107.00 | |

யாழ் வைத்தியசாலைக்கு 09.10.95இல் அனுப்பிய தொகை. 25000.00

**01.02.96 இல் கையிருப்பு.24203.00**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## மாபெரும் நாடக போட்டி விழா

கேணிங் நகரில் வளர்பிறை நாடகமன்றம் நடாத்தும் மாபெரும் நாடகப்போட்டி விழா. எதிர்வரும் ஆவணி மாதம் இடம்பெறவுள்ளது. (திகதி பின்னர் அறிவிக்கப்படும்) பங்குபற்ற விரும்பும் நாடகமன்றங்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

M. P. AROKIYANATHAR
PORSVÆNGET 42.3.TH,
7400 HERNING
TLF. 97 211994- 40 271146

www.tamilarangam.net

Post besørget blad
7401 HRC 50147

**Tamilsk - Dansk Venskabsforening**
தமிழ் – டெனிஸ் தோழமை ஒன்றியம்
**Tamil Danish Friendship Association**
Postboks 103, DK-7400 Herning, Denmark
Tlf & Fax +45 97 12 55 93, Giro 695- 0892